திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, சென்னை அண்ணாசாலையில் அதிக அளவில் ஏற்படுகின்ற விபத்துக்களைத் தடுக்க காமராஜர் சாலையில் இரும்பு சுவர் போட்டிருப்பது போன்று அண்ணாசாலையிலும் அண்ணா சிலையிலிருந்து கலைக்கல்லூரி வரையில் இருமபு சுவர் போடப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, லாரி விபத்தைப் பற்றித்தான் கேட்டிருக்கிறார்கள் மூலக்கேள்வியில். அண்ணாசாலையின் நடுவில் இரும்புக்கமபி போடுவதாக இருந்தால் இரண்டு பக்கமும் அகலம குறைந்து போக்குவரத்துக்கு சிரமமாக இருக்கும். அதை பரிசீலனை செய்து பார்த்து, தேவை என்றால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ப. தீர்த்தராமன் : தலைவர் அவர்களே, அண்ணா சாலையின் இரு மருங்கிலும் இருக்கின்ற நடைபாதைகளில் கடைகளும், அதற்கு மேலாக, பிச்சைக்காரர்களின் நெரிசலும் அதிகமாக இருக்கிறது. அதனால் நடைபாதைகள் தடுக்கப்பட்டு, பொதுமக்கள், வாகனங்கள் செல்லவேண்டிய இடங்களில் நடக்கவேண்டியுள்ளது. அவைகளையெல்லாம் அகற்றி நடைபாதையில் மக்கள் நடப்பதற்கும், வாகனங்கள் செல்லும் பாதையில் வாகனங்கள் செல்வதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவையெல்லாம் உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்க வேண்டிய கேள்வி.

பெரியகாடம்பட்டியில் ஆரம்பிக்கப்பட்ட சேகோ (Sago) தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

385—(*வினா எண். 18201) திரு. செ. செம்மலை : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம தொகுதியில் பெரிய காடம்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கென்று ஆரம்பிக்கப்பட்ட சேகோ (Sago) தொழில் கூட்டுறவுச் சங்கம் எப்போது பணியைத் தொடங்க உள்ளது ?

(ஆ) மேலும் அந்தத் தொகுதியில் எத்தனை இடங்களில்—அதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

1984 மார்ச் 21]

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: (அ) பெரிய சாடம் பட்டி அரிசன ஸ்டார்ச்சு மற்றும் சவ்வரிசி தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம் 8-6-1982 அன்று பதிவு செய்யப்பட்டது. இது இன்னமும் உற்பத்தியைத் துவங்கவில்லை.

(ஆ) இப்பகுதியில் இந்த மாதிரி வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கம் தொடங்க தற்போது எதுவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. செ. செம்மலை: இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கத்தினுடைய முதலீடு எவ்வளவு என்ற விவரத்தையும், மேற்படி சங்கத்தில் எத்தனை உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஆகும் செலவு தற்போது ரூ. 7.05 இலட்சத்திலிருந்து ரூ. 16 இலட்சமாக அதிகமாகியிருக்கிறது. இதில் 50 ஆதிதிராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இன்னும் இந்தச் சங்கத்தினுடைய பணிகள் துவங்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் தாமதத்திற்கான காரணம் என்ன? அந்தக் காலதாமதம் இப்போது தவிர்க்கப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: காலதாமதத்திற்கான காரணம் நிலம் கிடைக்காமல் இருந்தது. தற்போது நிலம் கிடைத்திருக்கிறது. இந்தத் திட்டம் விரைவில் செயல்படத் துவங்கும்.

வேர்கிளம்பி என்னுமிடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற் கூட்டுறவு இரப்பர் தொழிற்சாலை.

386—*(வினா எண். 21302) திரு. டி. மணி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையத்தின் கீழ் வேர்கிளம்பி என்னுமிடத்தில் தொழிற் கூட்டுறவு ரப்பர் தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

(ஆ) அத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?